## கழகத்தலைவர் - முதலமைச்சர் பிறந்த நாள் விழா:

# சென்னை, தென்மேற்கு மாவட்டக் கழகம் சார்பில், பாக முகவர்கள் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 7 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி சிறப்புரை!

**சென்னை, மார்ச் 4 -**

**சென்னை, தென்மேற்கு மாவட்டக் கழகம் சார்பில், கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, பாக முகவர்கள், மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.**

**இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பாக முகவர்கள் மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் பூக்கள் விற்பனை செய்யும் மகளிர் உட்பட 7 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர் ``பாசிஸ்ட்டுகளின் இந்தித் திணிப்பு முயற்சியை முறியடிப்போம் மக்களை வைத் தொகுதி வரையறை எனும் சூழ்ச்சியை வீழ்த்துவோம் என்ற நம் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் செய்தியை மனதில் ஏந்திச் செயல்படுவோம்" என்று இந்தப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்.**

அப்போது அவர் ஆற்றிய சிறப்புரை வருமாறு:

ஒரு கனமழைக்குப் பிறகு எனக்குப் பேசுவதற்கு இங்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த மழை எப்பொழுது நிற்கும் என்று அனைவரும் காத்திருந்து ஒரு வழியாக, மழை விட்டு இங்கு எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதுதான் தெரிகிறது, ஏன் பாராளுமன்றத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு உங்களுக்கு மைக் தருவதற்கு ஏன் தயங்குகிறார்கள் என்று.

இங்கேயே இந்தக் கிழி கிழிக்கிறீர்களே, பாராளுமன்றத்தில் நம் அரசின், இயக்கத்தின் குரலாக ஒலிக்கின்ற அக்கா தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள் இங்கு சிறப்பாக உரையாற்றிய பிறகு, எனக்கு இங்கு பேச வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது. என் அருமை சகோதரிகள் அத்தனை பேருக்கும் எனது மகளிர் தின வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 7 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

நம் இந்திய ஒன்றியத்தின் ஒப்பற்ற தலைவர், கழகத் தலைவர், தமிழக முதலமைச்சரின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு, தென்மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக 7,000 பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்தித்து, உங்களிடம் உரையாற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமை அடைகிறேன்.

இப்படிப்பட்ட சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து என்னை அழைத்தமைக்காக, மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் மயிலை வேலு அவர்களுக்கு மீண்டும் என் நன்றியையும் பாராட்டுகளையும் வணக்கத்தையும் தெரிவித்து கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் மயிலை வேலு அவர்கள் காலை 6 மணிக்கெல்லாம் எழுந்து, அழைப்பு விடுத்து விடுவார். வாட்ஸ் அப்பில் ஒரு குறுஞ்செய்தி அனுப்பி விடுவார்" என்று இங்கு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் குட்டி அவர்கள் பேசும்பொழுது சொன்னார். அவர் செய்தியை மட்டும் அனுப்ப மாட்டார். சில நேரங்களில் அதோடு ஒரு கார்ட்டூன் சேர்த்து அனுப்புவார். இன்னும் அந்த வழக்கம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

### மேடையில் கலங்கரை விளக்கம்!

ஒரு பத்து வரி எழுதி ஒரு விஷயத்தை சொல்வதை விட, அதற்கான ஒரு சின்ன கார்ட்டூன் போட்டு உணர்த்தக் கூடியவர்தான் அண்ணன் மயிலை வேலு அவர்கள். அதே சாதுரியத்தோடுதான் இன்றைக்கு இந்த சிறப்பான நிகழ்ச்சியை, நடத்திக் கொண்டு இருக்கிறார். இது தலைவரின் பிறந்தநாள் கூட்டம், நலத்திட்ட உதவிகள் கூட்டம் என்றாலும், ஒரு நவீன தொழில்நுட்பத்தோடு இன்றைக்கு இந்தக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். ஏன், அப்படி சொல்கிறேன் என்றால், மேடைக்கு வரும் பொழுது, நான் மெரினா கடற்கரைக்குச் சென்று விட்டேன் என்று நினைத்தேன். என்னவென்று பார்த்தால் மேடையில் கலங்கரை விளக்கத்தை வைத்திருக்கிறார்.

### முதலமைச்சரின் இல்லம்!

இந்த நிகழ்ச்சிக்கு கொடுக்கப்பட்ட துண்டறிக்கையை வந்தவுடன் படித்தேன். அதில் ஒரு கியூ ஆர் கோடு இருந்தது. இது எதற்கு என்று கேட்டேன். யாராவது தொலைந்து போய் விட்டார்கள் என்றால், அவர்களை செல்போன் மூலமாக புகைப்படம் பிடித்தார்கள் என்றால், போன் அவர்களை இங்கு கொண்டு வந்து விட்டு விடும் என்று சொன்னார். அந்த அளவிற்கு இப்போது இருக்கின்ற தொழில்நுட்பங்களை எல்லாம் பயன்படுத்தி, சிறப்பாக சாமர்த்தியமாக, மற்ற மாவட்டங்களுக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக இன்றைக்கு இந்தத் தலைவர் பிறந்தநாள் கூட்டத்தை அவர் நடத்திக் கொண்டு இருக்கிறார்.

எனக்கு மட்டுமல்ல, இந்த மாவட்டம் நம் கழகத் தலைவர் அவர்களுக்கும் மிக மிக நெருக்கமான மாவட்டம். ஒன்றோடு ஒன்றாக இருக்கக் கூடிய மாவட்டம். ஏனென்றால், தலைவர் அவர்கள் தங்கியிருக்கின்ற மாவட்டமே, இந்த மாவட்டம் தான். முதலமைச்சரின் இல்லமும் இந்த மாவட்டத்தில்தான் இருக்கிறது.

நானாக இருக்கட்டும், தலைவராக இருக்கட்டும் இன்னொரு பெருமை என்னவென்றால், தலைவர் அவர்கள் தமிழ்நாடு முழுக்கப் பயணம் செய்து, பிரச்சாரம் மேற்கொண்டார். அந்தப் பிரச்சாரத்தைப் பேசி முடிக்கும் பொழுது சொல்வார். வாக்காள பெருமக்கள், நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்று சொல்வார். தலைவர் அவர்கள் தமிழ்நாடு முழுக்க பிரச்சாரம் செய்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்று சொன்னால், அவர் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க இந்த மாவட்டத்திற்குத்தான் வந்தாக வேண்டும், அது எனக்கும் பொருந்தும். அப்படிப்பட்ட பல சிறப்புகளைக் கொண்ட மாவட்டம்தான் இந்த சென்னை தென்மேற்கு மாவட்டம்.

### சந்திக்கின்ற வாய்ப்பு!

2019 ஆம் ஆண்டு, நான் முதன்முதலில் பிரச்சாரத்தை மேற்கொண்டதும், உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் அக்கா தமிழச்சி தங்கபாண்டியனுக்காகத்தான் சைதாப்பேட்டையில் எனது பிரச்சாரத்தை தொடங்கினேன். எனவே இங்கு எங்களின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கு வந்து இருக்கிறேன். அந்த உணர்ச்சியோடு இங்கு உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு நிறைய மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் வருகை தந்துள்ளீர்கள். நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் உங்களுக்காக ஒவ்வொரு நாளும் கடன் இணைப்புகளை வழங்கிக்கொண்டு வருகிறார்.

குறிப்பாக, கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் நம் திராவிட மாடல் அரசில் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 235 கோடி ரூபாய் அளவில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கான கடன் இணைப்புகள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

### கூட்டு அரங்கம் அமைக்கக் கோரிக்கை!

அண்ணன் வேலு அவர்கள் பேசும்பொழுது இன்னொரு கோரிக்கையை வைத்தார். மகளிர் சுய உதவி குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் கலந்துபேசுவதற்காக, கூட்டம் நடத்துவதற்காக ஒரு கூட்டு அரங்கம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார். நிச்சயமாக உங்கள் கோரிக்கையை நான் முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிறைவேற்றித் தருவேன். ஏற்கெனவே, கிராம ப்புறங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு என்று தனியாக ஒரு அரங்கம் இருக்கிறது. இப்பொழுது நீங்கள் முதன்முறையாக உங்கள் தொகுதிக்கு மட்டும் கேட்கவில்லை, ஒட்டுமொத்த சென்னைக்கும் முதல் முறையாக நீங்கள் கோரிக்கை வைத்து இருக்கிறீர்கள். முதலமைச்சர் அவர்களிடம் உடனே சொல்லி அந்தப் பணிகளை உடனே நாங்கள் மேற்கொள்வோம்.

அதேபோல் இன்னொரு சிறப்பையும் சொன்னார். தியாகராயர் நகரில், இன்றைக்கு கூட்டங்களை நடத்துவதற்கு அரங்கம் எந்த இடத்திலும் இல்லை. எப்பொழுதும் நடத்துகின்ற இடத்தில் பணிகள் நடக்கின்றன. எனவே, இந்த இடத்தை ஒதுக்கிக் கொடுத்தமைக்கு காவல்துறைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று சொன்னார். அவர் காவல்துறைக்கு மட்டும் நன்றி சொல்லிவிட்டு விட்டுவிட்டார். அவர் உண்மையாகவே நன்றி சொல்ல வேண்டும் என்றால், நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்ல வேண்டும்.

ஏனென்றால், மெட்ரோ ரயில் திட்டத்தை சென்னைக்கு கொண்டு வந்தது நம் முதலமைச்சர் அவர்கள்தான். எனவே, சிறந்த ஏற்பாட்டோடு, ஒரு நல்ல நிகழ்ச்சியாக இந்த நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற நிகழ்ச்சி, மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

நம் முதலமைச்சரின் பிறந்தநாளை, தமிழ்நாடு மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கின்ற மாநகரங்கள் மட்டுமல்ல, அனைத்து கிராமங்களிலும், கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியாவில் இருக்கின்ற அனைத்துத் தலைவர்களும் வாழ்த்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். தலைவர்கள் மட்டுமல்ல, பொதுமக்களும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்கள்.

### தொடர்ந்து குரல் கொடுப்போம்!

நம் தலைவர் அவர்கள் பிறந்த நாள் செய்தியாக இரண்டு முக்கியமான விஷயங்களை நேற்று முன்தினம் அறிவித்து இருந்தார். முதல் பிரச்சினை. மும்மொழிக் கொள்கை என்ற பெயரில், இந்தி மொழியை நம் மீது திணிக்க முயற்சிக்கின்ற ஒன்றிய அரசு. அதை என்றைக்கும் நாம் அனுமதிக்க மாட்டோம்.

இரண்டாவது தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரில், தமிழ்நாட்டில் இருக்கின்ற நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கின்ற முயற்சியை ஒன்றிய அரசு மேற்கொண்டு இருக்கிறது. அதையும் என்றைக்கும் அனுமதிக்க மாட்டோம். நாங்கள் தொடர்ந்து குரல் கொடுப்போம் என்று பிறந்தநாள் வாழ்த்து செய்தியக்ச் சொல்லி இருக்கிறார்.

### இரு மொழிக் கொள்கைதான் இருக்கும்!

1967ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்தவுடன், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று முதலமைச்சரான பிறகு தமிழ்நாட்டில் எப்பொழுதும் இரு மொழிக் கொள்கைதான் இருக்கும் என்று சட்டம் இயற்றினார். இன்றைக்கு வரைக்கும் நாம் அந்த இரு மொழிக் கொள்கையைத்தான் பின்பற்றி வருகிறோம்.

ஆனால், இன்றைக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு, புதிய கல்விக் கொள்கை என்று சொல்லி, குறுக்கு வழியில் இந்தியை நம் மீது திணிக்கும்



முயற்சியை மேற்கொண்டு இருக்கிறார்கள். இந்தியை நேரடியாகக் கொண்டு வந்து திணித்தால், தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம், போராடுவோம் என்று தெரிந்த ஒன்றிய அரசு `மும்மொழிக் கொள்கை' என்று குறுக்கு வழியில், அதை நுழைக்கப் பார்க்கிறார்கள்.

### ஒன்றிய அரசு உணர வேண்டும்!

இந்தியை ஏற்றுக் கொண்டால் மட்டும்தான், நம் பள்ளிக்கல்வித்துறைக்கு 2,150 கோடி ரூபாயைத் தருவோம் என்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் மிரட்டிக் கொண்டிருக்கிறார். இவர்கள் மிரட்டினால் பயப்படுவதற்கு, நாம் ஒன்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது. நாம் திராவிட முன்னேற்ற கழகம். இங்கு ஆண்டு கொண்டு இருப்பது எடப்பாடி பழனிசாமி கிடையாது. நம் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் என்பதை, ஒன்றிய அரசு முதலில் உணர வேண்டும்.

அதனால்தான் `நீங்கள் என்ன சொன்னாலும், மும்மொழிக் கொள்கையை ஏற்க முடியாது' என்று நம் தலைவர் அவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார். இதைப் பார்த்து, இன்றைக்கு சமூக வலைத்தளங்களில் வடநாட்டைச் சேர்ந்த தலைவர்கள், பொதுமக்கள் பாராட்டுகிறார்கள். தென்னகத்திலிருந்து ஒரு முதுகெலும்புள்ள தலைவர் வந்திருக்கிறார் என்றால், அது நம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் என்று வட மாநிலங்களில் இருந்து பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

### இந்தி நாம் விரும்பவும் இல்லை!

`செம்மொழியாம் தமிழ் நமக்கு இருக்கின்ற போது, மும்மொழி ஏன்?' என்று இன்றைக்கு மக்கள் கேட்க ஆரம்பித்து இருக்கிறார்கள். ஒன்றிய அரசிடம் நாம் கேட்பது, நம் நிதி உரிமையைத்தானே தவிர, கூடுதலாக இன்னொரு மொழியை நாம் என்றைக்கும் கேட்கவில்லை. அதை நாம் விரும்பவும் இல்லை. அவர்களின் நோக்கம் எந்த வழியிலாவது, நம் மீது எப்படியாவது இந்தியைத் திணித்து தமிழர்களின் பண்பாட்டை, வடநாட்டுச் சிந்தனையை எப்படியாவது நம் மீது திணிக்க வேண்டும் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது.

இந்தியயை ஏற்றுக்கொண்ட பல மாநிலங்களின் நிலைமை மோசமடைந்து இருக்கிறது. உதாரணத்திற்கு, ஹரியானா மாநிலத்தைப் பார்த்தீர்கள் என்றால், அவர்களின் தாய்மொழி பெயர் ஹரியன், பீகார் மாநிலத்தை எடுத்துக் கொண்டீர்கள் என்றால், அவர்களின் தாய்மொழியின் பெயர் பீகாரி, மகாராஷ்டிரத்தில் மராட்டியம், உத்தரப் பிரதேசத்தில் போஜ்புரி. இப்படி அந்த மாநிலங்களின் தாய்மொழிகளை எல்லாம் இந்தி மொழி உள்ளே நுழைந்து சிதைத்து இருக்கிறது.

தமிழ்நாட்டிற்குள் நாம் இந்தியை அனுமதித்தோம் என்றால், நம் தாய் தமிழ் மொழிக்கும் இதே நிலைமைதான் ஏற்படும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதற்காகத்தான் நம்மை எப்படியாவது மாற்ற வேண்டும் என்று, 5,000 கோடி ரூபாய் தருகிறோம், 6,000 கோடி ரூபாய் தருகிறோம் எப்படியாவது மும்மொழிக்கொள்கையை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று, ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து முயற்சி செய்து கொண்டு இருக்கிறது.

### இன்னொரு மொழிப்போரைச் சந்திக்க நேரும்!

1938இல் இருந்து இந்தித் திணிப்பிற்கு எதிராக நூற்றுக்கணக்கான உயிர்களைக் கொடுத்து தியாகம் செய்தது நம் தமிழ்நாடு மாநிலம் என்பதை நீங்கள் உணர வேண்டும். பாசிஸ்டுகளின் மிரட்டலுக்கும், இவர்களின் வேகத்திற்கும் நம் தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும் அடிபணிய மாட்டார்கள். தமிழ்நாட்டிற்குள் இந்தி மொழியைத் திணிக்க நினைத்தீர்கள் என்றால் இன்னொரு மொழிப்போரை பாசிஸ்டுகள் சந்திக்க நேரும் என்ற அறைகூவல், மிரட்டலை இங்கே விடுக்க விரும்புகிறேன்.

ஒரு பக்கம் இந்தித் திணிப்பும் மும்மொழிக் கொள்கையும் என்றால், இன்னொரு பக்கம் பார்த்தீர்கள் என்றால், நம் பண்பாட்டின் மீது தாக்குதல்கள் நடத்துகின்றது ஒன்றிய அரசு. டிலிமிடேஷன், அது அதாவது தொகுதி மறுவரையறை என்று சொல்லி அரசின் உரிமைகளையும் நசுக்கப் பார்க்கிறது. நாடாளுமன்றத் தொகுதிகளை மக்கள் தொகை எண்ணிக்கையில் மறுவரை செய்ய வேண்டுமென்று இன்றைக்கு ஒன்றிய அரசு துடித்துக் கொண்டே இருக்கிறது.

ஏற்கனவே 1971இல் இதே போன்ற பிரச்சனை வந்தபோது 25 வருடத்திற்கு இந்த பிரச்சினையைத் தள்ளி வைக்கிறோம் என்று சொன்னது ஒன்றிய அரசு. மீண்டும் 2001ஆம் ஆண்டு இதே பிரச்சினை வரும்பொழுது மீண்டும் 25 வருடம் தள்ளி வைக்கிறோம் என்று சொன்னது, ஒன்றிய அரசு. இன்றைக்கு மீண்டும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு இத்திட்டத்தை தூக்கிக்கொண்டு வருகிறது.

### உரிமை பறிபோகின்ற அபாயம்!

இன்றைக்கு இந்தியா முழுக்கப் பார்த்தீர்கள் என்றால், 543 தொகுதிகள் உள்ளன. இந்தியாவில் இருக்கின்ற மொத்த தொகுதிகளில் தமிழ்நாட்டின் பங்கு 7.2%. மக்கள்தொகை அடிப்படையில் தொகுதிகளை சீரமைத்தால், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திய தமிழ்நாடு அரசுக்கு இப்பொழுது இருக்கின்ற 39 தொகுதிகளில் இருந்து எட்டு தொகுதிகள் குறைந்து, 31 தொகுதிகளாகக் குறையும்.

அதே நேரத்தில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தாத உத்தரப்பிரதேசம், பீகார் மாநிலங்களுக்கு அதிகமான எண்ணிக்கையில் தொகுதிகள் உயர வாய்ப்பு இருக்கிறது. இதனால் மக்களவையில் தமிழ்நாட்டிற்கான உரிமை பறிபோகின்ற அபாயம் ஏற்படுகிறது. இதையெல்லாம் ஒன்றிய அரசு இன்றைக்கு யோசித்து செய்து கொண்டிருக்கிறார்கள்.

புதிய பாராளுமன்ற கட்டடம் திறக்கும் பொழுதே, கிட்டத்தட்ட 850 இருக்கைகளுடன் தொடங்கப்பட்டது. இதையெல்லாம் கேள்வி கேட்டால், தமிழ்நாட்டிற்கு எந்த பாதிப்பும் வராது என்று, தமிழ்நாட்டிற்கு வந்த ஒன்றிய அமைச்சர் அமித் ஷா அவர்கள் சொல்கிறார். ஆனால், அவரே நாடாளுமன்றத்தில் என்ன பேசினார். ``நிச்சயம் தொகுதிகளை விரைவில் மறு சீரமைப்பு செய்வோம். தொகுதிகளின் எண்ணிக்கை உயரும்" என்று பேசினார். இரண்டு வருடங்களுக்கு முன்பே இதைச் சொன்னவர்தான் அமித்ஷா அவர்கள். ஆகவே தான் திராவிட முன்னேற்ற கழகம், இந்தத் திட்டத்தை வன்மையாக எதிர்க்கிறது. கண்டிக்கிறது, இதை கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

தொகுதி மறு வரையறை மூலமாக வட மாநிலங்களுக்கு, தொகுதிகள் உயர்த்தப்பட்டால், அதே விகிதாச்சாரத்தில் தமிழ்நாட்டுக்கும் உயர்த்த வேண்டும் என்றுதான் நாங்கள் தொடர்ந்து கேட்டுக்கொள்கிறோம். எனவே, நம் தலைவர் அவர்கள் இந்தியாவிலேயே முதல் முதலமைச்சராக, இன்றைக்கு இந்த பிரச்சினையை எழுப்பி, வருகின்ற ஐந்தாம் தேதி அனைத்துக் கட்சி கூட்டத்தையும் கூட்டி இருக்கிறார் நம் முதல்வர்.

இன்றைக்கு இந்தித் திணிப்பாக இருக்கட்டும், தொகுதி மறுவரையறையாக இருக்கட்டும். ஒட்டு மொத்த நாடும், தமிழ்நாட்டில் இருந்து நம் முதலமைச்சர் என்ன சொல்கிறார், என்ன குரல் தமிழ்நாட்டில் இருந்து வருகிறது என்றுதான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. நம் தலைவர் அவர்கள், மும்மொழிக் கொள்கை, தொகுதி மறுவரையறைக்கு எதிராக பற்ற வைத்திருக்கின்ற சுயமரியாதை நெருப்பு, இன்றைக்கு இந்திய ஒன்றியத்தின் அத்தனை மாநிலங்களிலும் காட்டுத் தீ போல பரவி இருக்கிறது.

### முதலமைச்சரின் தொலைநோக்குச் சிந்தனை!

நம் தலைவர் அவர்கள் குரல் எழுப்பிய பிறகு, கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா அவர்களும் இன்றைக்கு எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறார். அதேபோல் பல மாநில தலைவர்கள் தொகுதி மறுவரையறை பற்றிப் பேச ஆரம்பித்து இருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் நம் முதலமைச்சரின் தொலைநோக்கு சிந்தனைதான். இதுபோன்ற அரசியல் நிலைப்பாடுகள் மட்டுமல்ல, அரசின் நலத்திட்டங்களை நிறைவேற்றுவதிலும், நம் மாநிலம்தான் இன்றைக்கு எடுத்துக்காட்டாக இருப்பது நம் தமிழ்நாடு மாநிலம் தான், நம்முடைய முதலமைச்சர்தான்.

### கழக அரசின் சாதனைகள்!

நம் திட்டங்கள் சிலவற்றைப் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். விடியல் பயணம் என்ற திட்டம். நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்று போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணம் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் இந்த நான்கு வருடத்தில் மகளிர் 620 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் இந்த விடியல் பயணத் திட்டத்தின் மூலமாக மாதம் ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள். இன்றைக்கு இந்த திட்டத்தை கர்நாடக மாநிலம் பின்பற்றிக் கொண்டிருக்கிறது.

அரசுப் பள்ளியில் படித்து, உயர்கல்வியில் எந்த கல்லூரிக்குச் சென்று படித்தாலும் அந்த மாணவிக்கும், மாணவனுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் மூலம் வழங்கிக்கொண்டிருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். வருடம்தோறும் கிட்டத்தட்ட 4 லட்சம் மாணவ மாணவிகள் இதில் பயன்பெற்று வருகிறார்கள்.

அதேபோல் பள்ளி குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இந்த திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு நாளும் திங்கள் முதல் வெள்ளி வரை, ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற 21 லட்சம் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள்.

இந்தியாவே இன்றைக்கு திரும்பிப் பார்க்கின்ற ஒரு திட்டம். தேர்தல் அறிக்கையில் நாம் சொன்ன வாக்குறுதி. மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம். இதை செயல்படுத்தியது நம் தலைவர் அவர்கள். பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில் 2023ஆம் ஆண்டு இதை ஆரம்பித்தார். இன்றைக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலமாக மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இங்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது ஒரு கோரிக்கை வைத்தார். இரண்டு பேருமே சொன்னார்கள். எங்கள் தொகுதிகளில் மகளிர் சில பேருக்கு விடுபட்டு போயிருக்கிறது இந்தத் திட்டம் என்று. இதை சட்டமன்றத்தில் நான் பேசியிருக்கிறேன். நிச்சயம் இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் சரி செய்யப்பட்டு தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். இன்றைக்கு இந்த கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை, தமிழ்நாட்டைத் தொடர்ந்து கர்நாடகம், ஜார்கண்ட், மகாராஷ்டிரா போன்ற பிற மாநிலங்களிலும் செயல்படுத்தி இருக்கிறார்கள்.

### 13 துறைகளில் முதலிடம்!

நம் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இருக்கின்ற நம் தமிழ்நாடு, இன்றைக்கு கல்வி, மருத்துவம், சுகாதாரம், பெண்கள் முன்னேற்றம் போன்ற 13 துறைகளில் இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருக்கிறது நம் தமிழ்நாடு. இதை நம் தமிழ்நாடு அரசு சொல்ல வில்லை. ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பு சொல்கிறது. இப்படி சாதனை மேல் சாதனை செய்கின்ற, தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு உதவி செய்யவில்லை என்றாலும் பரவாயில்லை, ஆனால், தொந்தரவு கொடுக்காமல் இருக்க வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கிறோம்.

நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒவ்வொரு விஷயத்திலும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டை ஏதோ ஒரு விதத்தில் பழிவாங்கிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு இந்தியாவிலேயே பார்த்தீர்கள் என்றால், எந்த மாநிலம் அதிகமான வரியை ஒன்றிய அரசுக்குச் செலுத்துகிறது என்றால், நம் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது. ஆனால், நாம் நிதி கேட்டோம் என்றால், ஒன்றிய அரசு கொடுப்பதில்லை. சமீபத்தில், ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் பார்த்தீர்கள் என்றால், தமிழ்நாட்டிற்கு என்று ஒரு திட்டத்தை கூட அறிவிக்கவில்லை. தமிழ்நாட்டிற்கு திட்டத்தைதான் அறிவிக்கவில்லை என்று பார்த்தால், தமிழ்நாடு என்கிற நம் மாநிலத்தின் பெயரைக் கூட அவர்கள் ஒரு முறை கூட உச்சரிக்கவில்லை. பட்ஜெட்டில் இடம்பெறவில்லை.

2023ஆம் ஆண்டு சென்னை மாநகர் மிக்ஜாம் புயலால் மிகவும் பாதிக்கப்பட்டது. அப்போது ஒன்றிய அரசிடம் நாம் நிவாரண நிதி கேட்டோம். ஒன்றிய அமைச்சர்கள் எல்லாம் வந்து பார்த்தார்கள். வந்து பார்த்துவிட்டு போனதோடு சரி. ஏதாவது நிதி கொடுத்தார்களா என்றால் கொடுக்கவே இல்லை. அதேபோல் சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் ஃபெங்கால் புயல் வந்தது. நம் முதலமைச்சர் அவர்கள் நிவாரணம் கேட்டு, ஒன்றிய அரசுக்கு வேண்டுகோள் வைத்தார். `6,650 கோடி ரூபாய்க்கு இழப்பு ஏற்பட்டு இருக்கிறது. நிதி கொடுங்கள்' என்றார். ஒன்றிய அரசு எவ்வளவு தெரியுமா கொடுத்தார்கள்? வெறும் 950 கோடி ரூபாய் மட்டும்தான் கொடுத்தார்கள். அதுவும் பார்த்தீர்கள் என்றால் நாம் கேட்ட நிதியை கொடுக்கவில்லை.

மிக்ஜாம் புயலின் போது ஒன்றிய அமைச்சர்கள் சுற்றிப்பார்க்க வந்தார்கள். ஆனால் இந்த முறை எவ்வளவு பாதிப்பு என்று சுற்றிப் பார்ப்பதற்கு கூட ஒன்றிய அமைச்சர்கள் வரவில்லை.

### அவர் ஒரு தபால்காரர் மாதிரி!

நாடாளுமன்றத் தேர்தல் சமயத்தில் ஐந்து மாதங்களில் ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் கிட்டத்தட்ட ஆறு முறை தமிழ்நாட்டிற்கு வந்தார். கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறையில் உட்கார்ந்து தியானம் எல்லாம் செய்தார். உங்களுக்கு எல்லாம் நினைவிருக்கும். ஆனால், தேர்தல் முடிந்து கிட்டத்தட்ட ஏழு, எட்டு மாதங்கள் ஆகிவிட்டன. இதுவரைக்கும் ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் தமிழ்நாட்டுப் பக்கம் தலை வைத்துப் படுத்தாரா? என்பதை, நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இதற்கெல்லாம் மேலாக இன்றைக்கு தமிழ்நாட்டில் இன்னொருவர் இருக்கிறார். ஒன்றிய அரசின் ஏஜென்ட். அவர்தான் ஆளுநர் ஆர். என்.ரவி அவர்கள். அவருக்கு உண்மையிலேயே ஒரு வேலையும் கிடையாது. அவர் ஒன்றிய அரசின் ஒரு ஏஜென்ட் அவ்வளவுதான். அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரா என்றால் இல்லை, ஒன்றிய அரசால் நியமிக்க ப்பட்டவர். அவர் ஒரு தபால்காரர் மாதிரி.

முதலமைச்சர் சொல்வதை ஒன்றிய அரசிடம் சொல்ல வேண்டும், ஒன்றிய அரசு சொல்வதை இங்கு வந்து தமிழ்நாடு அரசிடம் சொல்ல வேண்டும். அது மட்டும்தான் அவரின் வேலை. தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ன எழுதி கொடுக்கிறாரோ, அதை சட்டமன்றத்தில் படிப்பது மட்டும்தான் அவரின் வேலை. ஆனால் அதைச் செய்வதில்லை அவர். தமிழ்நாடு என்ற வார்த்தை அவருக்குப் பிடிக்காது.

தொடர்ச்சி 11 -ஆம் பக்கம்